தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984, பிப்ரவரி 21, செவ்வாய்க்கிழமை

மாசி 9, ருத்ரோத்காரி — திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை''

பொதுப் பணியில் நாட்டு ஆட்சியில் ஈடுபட்டோர் தமக்கும் தம் தலைவனுக்கும் தம் நாட்டுக்கும் புகழையும் நன்மையையும் தராத வேலைகளை எப்போதும் செய்யவே கூடாது.

I. வினாக்கள் – விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மதுராந்தகம் வட்டத்தில் குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மின் இணைப்புகள்

1—(*வினா எண். 17318) திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் வட்டத்தில் குடிசைக்கு ஒரு விளக்கு கொடுக்கும் திட்டம் தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) 1980-81, 1981-82, 1982-83-ஆம் ஆண்டுகளில் எத்தனை குடிசைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் விளக்கு அளிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) மதுராந்தகம் வட்டத்தில் 1980-81-ம் வருடத்தில் 2,963 குடிசைகளுக்கும், 1981-82-ம் வருடத்தில் 3031 குடிசைகளுக்கும், 1982-83-ம் வருடத்தில் 1508 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகத்திலும் மற்ற பகுதிகளிலும் ஏராளமான குடிசைவாசிகள் இது போன்ற மின் இணைப்புக் கேட்டு விண்ணப்பித்து இருக்கிறார்கள். ஏற்கனவே மின் பற்றாக்

குறை இருந்த காரணத்தால் அரசாங்கம் மின் இணைப்புக் கொடுப்பதை நிறுத்தி வைத்து இருக்கலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு முறை அப்படித்தான் சொன்னார்கள். இப்போது மின்பற்றாக்குறை இல்லாமல் இருப்பதால், பழைய விண்ணப்ப தாரர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கும் மின் பற்றாக் குறைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்குவதில் பெரிய பாதிப்பு ஒன்றும் கிடையாது. தமிழ்நாட்டில் 5,22,074 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங் கப்பட்டுள்ளது. இன்னும் வழங்கப்பட வேண்டிய மனுக்களின் எண்ணிக்கை 14,420.

திரு. என். எ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கு வது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புள்ளி விவரங்களைத் தந்து இருக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியில் காமராஜர் நகர் என்கிற கிராமத்திலும், எட்டிக்குப்பம் கிராமத்திலும் தொடர்ந்து மனு செய்தும் கொடுக்காமல் இருப்பதை அரசு அறியுமா? பல்வேறு கிராமங் களில் மக்கள் மனு செய்துள்ளதால் அவர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அரசுக்குத் தெரியாது. தனிக் கேள்வி போட்டால் விவரம் தெரிவிக்க இயலும்.

மின் உற்பத்திக்குத் தேவையான அத்யாவசியப் பொருட்களுக்கான
விலை நிர்ணயம்

2—*(வினா எண். 19971) திரு. இ. கணேசன்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் உற்பத்திக்குத் தேவையான அத்யாவசியமானப் பொருட்களின் விலையை உயர்த்தும் போது மத்திய அரசு மாநில அரசுகளைக் கலந்து ஆலோசிக்க வற்புறுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில் ஏற்படுகிற இழப்புகளுக்கு மத்திய அரசு மாநில அரசுகளுக்கு மானியம் தர வற்புறுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) ஆம்

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் மைய அரசால் உயர்த்தப்பட்ட நிலக்கரி விலையின் விளைவாக மாநில அரசுக்கு செலவு எவ்வளவு அதிகம் ஏற்படுகிறது இப்படி, மின் உற்பத்திக்கு